2022 டிசம்பர் 31 ஆம் ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வானது 2022 டிசம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்கு மூலதனத்திலான மாற்றங்களுக்கான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைககளினதும் பொழிப்பு என்பவற்றினை உள்ளடக்கியதாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) இலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்த அறிக்கையானது அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) இலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

2022 டிசம்பர் 31 இலுள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் அதன் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையானதும் நியாயமானதுமான ஓர் பார்வையினைத் தருகின்றன என்பதோடு முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றுக்கள் என்பன எனது அறிக்கையின் தகைமை வாய்ந்த அபிப்பிராயத்துக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவுகள் நீங்கலாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 தகைமை வாய்ந்த அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) முந்தைய ஆண்டில் நிலையான வைப்புத்தொகையின் பெறத்தக்க வட்டி வருமானமாக ரூபா. 12,669,891 கணக்குகளில் காட்டப்பட்டிருந்துடன் நிலையான வைப்புத் தொகைகள் முதிர்வுக்கு முன்பே மீளப் பெறப்பட்டதால், வட்டி வருமானம் ரூபா. 10,059,248 ஆக இருந்துள்ளது. அதன்படி, மிகையாக காட்டப்பட்ட வட்டி வருமானமான ரூபா 2,610,643 ஆனது அரச கணக்கீட்டு நியமங்கள் 3 இன் அடிப்படையில் வரலாற்று கிரய அடிப்படையில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பெறத்தக்க வட்டி கணக்கு மற்றும் பெறத்தக்க வருமானம் ஆகியவற்றின் மீதி அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆண்டுக்கான பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டைக் கணக்கிடும் போது, ஊழியர்கள் முழு ஆண்டை நிறைவு செய்யாத நிலையில், முழு ஆணடொன்றிற்கான பணிக்கொடை கணக்கிடப்பட்டது. இதன் விளைவாக, பணிக்கொடை ஏற்பாடானது ரூபா. 7,146,199 இனால் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பணிக்கொடை ஒதுக்கீடானது நிதிக் கூற்றுக்களில் அந்தத் தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) டிசம்பர் 31 இல் உள்ளவாறான முதலீடு ரூபா. 371,291,985 என குறிப்பிடப்பட்டிருந்த அதேவேளையில், பணிக்கொடை நிதியத்தின் முதலீட்டுத் தொகையானது நிதிக் கூற்றுக்களில் ரூபா. 79,344,883 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிலையான வைப்புத்தொகைகளை வகைப்படுத்துவதற்கான கணக்காய்வுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்வு கணிப்பீட்டின்படி, நிலையான வைப்பு வருமானம் ரூபா. 57,438,109 எனக்குறிப்டப்பட்டிருந்த போதிலும், அது ரூபா. 55,320,428. ஆக ரூபா. 2,117,681 இனால் குறைத்துக் கறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) மேலதிக நேர கொடுப்பனவுகள் ரூபா. 2021 இன் மேலதிக நேரக் செலவுகளுக்காக ஒதுக்கப்படாத ரூபா. 152,601 ஆனது மீளாய்வு ஆண்டின் மேலதிக செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே, மீளாய்வு ஆண்டின் சேர்ந்த செலவினக் கணக்கின் மீதியானது அந்தத் தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ள அதே நேரத்தில், நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் நிதிக் கூற்றுக்களில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) கணக்காய்வு மற்றும் கணக்காய்வு இடைவெளிகளைக் கணக்கிடுவதற்காக வழங்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின்படி, ரூபா. 7,709,862 தொழிற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சலில், ரூபா. 1,932,802 முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் மற்றும் நிதி நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சலில் ரூபா.4,223,417 ஆகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

நான் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) அமைவாக எனது கணக்காய்வை மேற்கொண்டுள்ளேன். எனது பொறுப்புகள், அந்த நியமங்களின் கீழ், எனது அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள் எனது தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

1.3 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவலானது நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை தவிர்ந்த அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்களினைக் கொண்டுள்ளது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பு வாய்ந்ததாகும்.

எமது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன் அதனை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஏதேனும் வடிவிலான உத்தரவாதத்தினை வெளிப்படுத்த மாட்டோம்.

நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு எங்களின் கணக்காய்வு தொடர்பில், ஏனைய தகவல்களைப் வாசிப்பதும் அவ்வாறு செய்கையில், ஏனைய தகவல்கள், நிக் கூற்றுக்கள் அல்லது கண்க்காய்வில் பெறப்பட்ட எமது அறிவு அல்லது தவறானதாக தோன்றுகின்றதா என்பதைக் கவனத்தில் கொள்வதும் எமது பொறுப்பாகும்.

அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையினை வாசிக்கும் போது, உண்மையில் தவறான கூற்றுக்குகள் உள்ளடங்கியுள்ளன என நாங்கள் முடிவு செய்தால் அத்தகைய விடயங்களினைத் திருத்தம் செய்வதற்காக அதிகாரத் தரப்புடன் தொடர்பு கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் தவறான கூற்றுக்கள் திருத்தப்பட்டிருக்குமாயின், அரசியலமைப்பின் உறுப்புரை 156(4) இற்கு இணங்கிய வகையில், எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையில் நாம் அவற்றினை உள்ளடக்குவோம்.

1.4 நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு ஆணையளிக்கப்பட்டுள்ள முகாமைத்துவத்தின் கடமைப் பொறுப்புக்கள்

முகாமையானது மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படும் தவறான வெளிப்படுத்துகையிலிருந்து விடுபட்ட வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உணமையானதும் நியாயமானதுமான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்குகையில், நீடித்து நிலைத்திருக்கும் நிறுவனமாக அதிகாரசபையின் ஆற்றலினை மதிப்பீடு செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அத்துடன் வேறு ஏதேனும் மாற்று வழி இல்லாத போது நிதியத்தினைக் கலைப்புச் செய்வதற்கு அல்லது தொழிற்பாட்டு நடவடிக்கைகளினை இடைநிறுத்துவதற்கான நோக்கம் இருந்தாலன்றி, நீடித்து நிலைத்திருக்கும் அடிப்படையில் கணக்குகளினைத்

தயாரிப்பதும் நீடித்து நிலைத்திருப்பதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணையளிக்கப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளார்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16(1) இன்படி, அதிகாரசபையானது அதிகாரசபைக்காக தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்குத் தேவையான அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய ஏடுகள் மற்றும் பதிவேடுகளினைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

1.5 நிதிக் கூற்றுக்களினைக் கணக்காய்வு செய்யும் கணக்காய்வாளரின் கடமைப் பொறுப்புக்கள்

எனது நோக்கமானது மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படும் தவறான வெளிப்படுத்துகையிலிருந்து முற்று முழுதாக விடுபட்ட வகையில் நிதிக் கூற்றுக்கள் பற்றிய நியாயமான உறுதிப்படுத்துகையினைப் பெற்றுக் கொண்டு எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கியுள்ள கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதேயாகும். நியாயமான உறுதிப்படுத்துகை என்பது உறுதிப்படுத்துகையின் உயர் மட்டத்தினைக் குறிப்பிடுகின்றது. ஆனால், நீடித்து நிலைத்திருக்கின்ற போது, தவறான வெளிப்படுத்துகையினை எப்போதும் கண்டறியும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக நடாத்தப்பட்ட கணக்காய்வு என்பது உத்தரவாதமல்ல. தவறான வெளிப்படுத்துகையானது மோசடி அல்லது தவறின் காரணமாக எழுகின்றதுடன் அவை ஒவ்வொன்றாகவோ அல்லது மொத்தமாகவோ உண்மையாவையென கருதப்படின், அவைகள் இத்தகைய நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயன்பாட்டாளர்களின் பொருளாதார ரீதியான தீர்மானங்கள் செல்வாக்குச் செலுத்துமென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட முடியும்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குமைவாக, கணக்காய்வின் பகுதி என்ற வகையில், நான் கணக்காய்வினூடாக தொழில்சார் ஐயுறவினைப் பேணுதல் மற்றும் தொழில்சார் நிறைவேற்றுவதில் ஈடுபட்டு வருகின்றேன். மேலும்:

- மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படும் தவறான வெளிப்படுத்துகையிலிருந்தான இடர்களினை அடையாளங் காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல், இத்தகைய இடர்களுக்கு எதிர் வினையாற்றுகின்ற கணக்காய்வு நடைமுறைகளினை வடிவமைத்தல் மற்றும் நிறைவேற்றுதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை அளிப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வினைப் பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, ஆள்மாறாட்டம், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறாக விளக்கமளித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டுக்கு குந்தகம் விளைவித்தல் என்பனவற்றுடன் தொடர்புபடுவதாக அமைவதால் மோசடியின் விளைவாக ஏற்படும் உண்மைக்குப் புறம்பானவற்றினைக் கண்டறியாத இடரானது தவறொன்றின் காரணமாக எழுகின்ற விளைவொன்றிலும் பார்க்க மிகவும் அதிகமானதாகும்.

- அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு பயனுறுதி தொடர்பில் அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமல்லாது, தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளினை வடிவமைக்கும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு புரிந்துணர்வொன்றினைப் பெற்றுக் கொள்ளல்.

- கொடுக்கல் வாங்கல்களினை மதிப்பீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்துகைகள் உள்ளடங்கலான நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையினைக் கொண்டிருந்த நிகழ்வுகள் என்பன பொருத்தமானதும் நியாயமானதுமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன

- நீடித்து நிலைத்திருக்கும் நிறுவனமாக தொடர்ந்தியங்குவது குறித்து அதிகாரசபையின் ஆற்றல் தொடர்பில் கணிசமானளவு சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகளுடன் தொடர்புடையதாகவும் நிச்சயமற்றதாகவும் விளங்கும் கணக்காய்வு சான்றினை அடிப்படையாகக் கொண்ட தொடர்ந்து செல்லும் கணக்கீட்டு அடிப்படையின் பயன்பாட்டுப் பொருத்தப்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல். தற்போதிருக்கின்ற நிச்சயமற்ற தன்மையினை நான் முடிவுக்கு கொண்டு வருவதாயின், நான் நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புடைய எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டுமெனவும் அல்லது அத்தகைய வெளிப்படுத்துகைகள் போதுமானவற்றவை எனில் எனது அபிப்பிராயத்தினை மாற்றிக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றேன். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் என்பன தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபையின் தொடர்ச்சியான இயக்கத்தில் பாதிப்பினை ஏற்படுத்தலாம்.

- கொடுக்கல் வாங்கல்களினை மதிப்பீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்துகைகள் உள்ளடங்கலான நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையினைக் கொண்டிருந்த நிகழ்வுகள் என்பன பொருத்தமானதும் நியாயமானதுமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஏதேனும் முக்கியமான முக்கியமான கணக்காய்வு காண்புகள், உள்ளக கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் உள்ளடங்கலான ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு அலுவலர் கவனம் செலுத்தியுள்ளார் என எனது கணக்காய்வின் போது அடையாளம் காண்கின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விதித்துரைத்த ஏற்பாடுகளினை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 எனது அறிக்கையில் தகைமை வாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படையின் கீழ் விதித்துரைக்கப்பட்ட விடயங்களிலிருந்தான விளைவுகளுக்கானவை நீங்கலாக,

எனது பரிசோதனைகளிலிருந்தான வெளிப்பாடுகளின்படி, கணக்காய்வு நோக்கத்திற்கான அனைத்துத் தகவல்கள் மற்றும் விளக்கங்களினை நான் பெற்றுக் கொண்டுள்ளதுடன் உரிய நிதிசார் பதிவேடுகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(அ) இன் தேவைப்பாடுகளின்படி அதிகாரசபையினால் பேணப்பட்டுள்ளன.

2.1.2 நிதிசார் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ) (iii) இன் தேவைப்பாடுகளின்படி முன்னைய ஆண்டுடன் இணங்கிய வகையில் தயாரிக்கப்படுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ) (IV) இன் தேவைப்பாடுகளின்படி, முன்னைய ஆண்டில் நிதிசார் கணக்கீடுகள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையானது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. பின்பற்றப்பட்டுள்ள நடைமுறைகளின் அடிப்படையில் சான்றானது உண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் பின்வரும் கூற்றுக்களினை வெளிப்படுத்துவதற்கு எனது கவனத்திற்கு எதுவுமே வந்திருக்கவில்லை.

2.2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ) இன் தேவைப்பாடுகளின்படி, சாதாரண வியாபார விடயங்களுக்கு அப்பால் நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தங்களில் ஏதேனும் நேரடி அல்லது மறைமுக அக்கறையினை நம்பிக்கை நிதியத்தின் ஆளுநர் சபை உறுப்பினர் எவரேனும் கொண்டுள்ளாரா.

2.2.2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானம் நீங்கலாக, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின்படி, அதிகாரசபையின் ஆளும் குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடைய எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியுள்ளதா.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்ட இல. 19 இன் பிரிவு 12(எ) இன் தேவைப்பாட்டின்படி, பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, அதிகாரசபையானது அதன் தத்துவங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கமைவாக செயலாற்றியிருக்கவில்லை.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கைச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) இன் தேவைப்பாட்டின்படி, அதிகாரசபையின் வளங்கள் ஏற்புடைய சட்டங்களுக்கமைவாக கொள்முதல் செய்யப்பட்டு, சிக்கனமாகவும், திறமையாகவும், திறம்படவும் குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) 2015 ஆம் ஆண்டில், அதிகாரசபையானது ரூபா. 5,401,428 செலவிட்டு 1977 நேரடி இரு வழி தொடர்பு சேவை மென்பொருளை உருவாக்கி நுகர்வோர் பிரச்சினைகளை உடனுக்குடன் சமர்பிக்கவும், நுகர்வோருக்கான சந்தை விலையை அறிந்து கொள்ளவும் ஏற்பாடு செய்துள்ளதுடன் இந்த பொறிமுறையினை பொதுமக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு ரூபா. 3,786,942 இனையும் செலவிட்டுள்ளது. இருப்பினும், தொழில்நுட்ப பிழைகள், பொருட்களின் விலையை புதுப்பிக்காமை, அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் ஒருங்கிணைக்கும் தரவுகளை உள்ளடக்கும் முறைமையை உருவாக்காமை மற்றும் குறுந்தகவல் மூலம் ஒன்லைனில் முறைப்பாட்டு இலக்கத்தினை அனுப்பும் முறைமை மற்றும் சேவை மற்றும் விசாரணையின் முன்னேற்றத்தை தெரிவிக்கும் முறைமை என்பவற்றினை வகுக்காமை போன்ற காரணங்களால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை.

(ஆ) அதிகாரசபையானது ஒரு அங்காடி மேலாண்மை மென்பொருளை ரூபா. 200,000 பெறுமதியுடைய களஞ்சிய முகாமைத்துவ மென்பொருள், ரூபா.250,000/- பெறுமதியுடைய குற்றப்பண மற்றும் மூலொபாய நிதி முகாமைத்துவ மென்பொருள் மற்றும் ருபா.54,000/- பெறுமதுயடைய சொத்து முகாமைத்துவ மென்பொருள் என்பவற்றினை 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்திருந்த போதிலும் குறித்த மென்பொருட்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலேனும் பயன்படுத்தப்படவில்லை.

2.3. ஏனைய விடயங்கள்

(அ). 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. பாவனையளார் அலுவல்கள் சட்ட திருத்தமானது 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், சட்டத்தின் 30 பிரிவுகள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு பல வருடங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கை திகதி வரையிலேனும் குறித்த திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சட்டத்தின் 10 ஆவது பிரிவின்படி, காலாண்டொன்றிற்கு 25 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என லேபலிடலில் 100 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்ககளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டில் எந்த நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்படவில்லை.

(இ) சட்டத்தின் 27 ஆவது பிரிவின்படி அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு வர்த்தகரும் வருடாந்த கட்டணமாக நூறாயிரம் ரூபாய்க்கு விஞ்சாமல் செலுத்தி அதிகாரசபையில் பதிவு செய்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தும், அதிகாரசபை இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2003 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் உட்பிரிவு 13 இன் கீழ் மீளாய்வு ஆண்டில் மாவட்ட அலுவலகங்கள் தவிர்ந்த அதிகாரசபையின் பாவனையாளர் அலுவல்கள் பிரிவுக்கு கிடைத்த 1557 முறைப்பாடுகளில், 2021 டிசம்பர் 31

ஆம் திகதி வரையில் பெறப்பட்ட 318 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நிறைவு செய்யப்படவில்லை.

(இ) சட்டப் பிரிவில் 2015 முதல் 2021 வரை பதிவு செய்யப்பட்ட 1,647 முறைப்பாடுகளில், 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 767 புகார்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதுடன் 194 முறைப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. 291 முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையாததுடன் 168 முறைப்பாடுகளுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் 14 முறைப்பாடுகளுக்கான உத்தரவுகள் கையொப்பமிடப்படவில்லை. மேலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் 9494 சோதனைகளை அதிகாரசபை நடத்தியதுள்ளதுடன் ஆண்டில் நடத்தப்பட்ட 15,923 சோதனைகளுடன் ஒப்பிடுகையில் இது 40% குறைவாகும். இத்தகைய சோதனைகளில் 6980 சோதனைகளுக்கு மட்டுமே வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஈ) நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கவும், பொருட்கள் விற்பனை மற்றும் விநியோகம் குறித்த பாவனையாளர் முறைப்பாடுகள் குறித்தும் விசாரணை செய்யவும், உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர் அல்லது ஏனைய விடயங்களில் உரிமம் அல்லது உத்தரவாதம் தொடர்பான விடயங்களுக்கு இணங்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவுகள் 13 மற்றும் 32 இன் கீழ் பாவனையளார் முறைப்பாடுகள் தொடர்பாக அதிகாரசபை தலையிடலாம். சேவைகள். எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை மாவட்ட அலுவல்கங்களில் இருந்து பெறப்பட்ட 284 முறைப்பாடுகளும் தலைமை அலுவலகம் மூலம் பெறப்பட்ட 1078 முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை.

(உ) மீளாய்வு ஆண்டில் நாடளாவிய ரீதியில் 23,280 சோதனைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதில் 60% ஆகிய 13,980 சோதனைகள் மட்டுமே நிறைவு செய்யப்பட்டுள்ளன. கொழும்பு, கண்டி, களுத்துறை, காலி, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய ஆறு மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட சோதனைகளில் 50% மட்டுமே நிறைவடைந்துள்ளது.

(ஊ) இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூர் தயாரிப்புகளின் தரம் மற்றும் அவற்றின் நியமங்களைக் கண்காணிக்கும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட தரவு தளமொன்றினை உருவாக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்ப்படவில்லை.

(எ) கணினிமயமாக்கப்பட்ட முறைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் சில்லறை விலையைக் கண்காணிப்பதற்காக மீளாய்வு ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 40 பொருட்களுக்கு விவரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மாவட்ட அலுவலர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்

வகையில் 4 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தும் எந்த நிகழ்ச்சித்திட்டமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

(ஏ) மீளாய்வு ஆண்டில் பாவனையளார் அறிவூட்டல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களின் கீழ் பாடசாலைகளில் 50 பாவனையாளர் மையங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 7 பாவனையளார் மையங்கள் மாத்திரமே நிறுவப்பட்டுள்ளன.

(ஐ) போட்டிக்கு எதிரான மற்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளில் இருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பொது மற்றும் தனியார் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஒ) இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அதிகாரசபைக்கு வருமதியாகவுள்ள துயர் துடைப்பக் கடன் நிலுவையான ரூபா. 320,942 ஆனது 05 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்துள்ளதுடன் அவற்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஓ) பாதுகாப்பற்ற மற்றும் தரம் குறைந்த பொருட்களிலிருந்து பாவனையாளரைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், பல்வேறு அடையாளம் காணப்பட்ட தயாரிப்புகளுக்கு ஒரு பாதுகாப்பு முறைமையை உருவாக்க அதிகாரசபையினால் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதிகாரசபையானது அவுஸ்திரேலியாவின் Sicpa Security Solutions SA நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதிகாரசபை இது தொடர்பான உரிய உத்தரவை 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய 49 ஆம் இலக்க கட்டளையினை 1851/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிட்டிருந்தது. இருப்பினும், பல பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், மேற்படி 49 ஆம் இலக்க கட்டளையினை இரத்து செய்ய உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்ததால், உயர் நீதிமன்ற கட்டளை இலக்கம் 49 செயற்படுவதைத் தடுத்து இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது.

(ஔ) ஒப்பந்தம் செயல்படுத்தப்படாததால், Sicpa Security Solutions SA நிறுவனம் ஒருதலைப் பட்சமாக ஒப்பந்தத்தை இரத்து செய்து, சர்வதேச வர்த்தக சபையில் 2018 ஜூலை 30 ஆம் திகதியன்று தன்னிச்சையான வழக்கைத் தாக்கல் செய்தது. ஒப்பந்தத்தின் 3.3.2 பிரிவைத் தொடர்ந்து 2.716 பில்லியன் இழப்புகள். அதன் இறுதி மானியம் 2022 மே 10 ஆம் திகதி வழங்கப்பட்டது. அதன்படி, அதிகாரசபையானது ரூபா. 2,716 பில்லியன் மற்றும் 325,000 அமெரிக்க டொலர்களை நடுவர் மன்றக் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இந்தத் திட்டம் தொடர்பாக வெளிநாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன், திட்டத்தைச் செயற்படுத்தும் திறன் குறித்து சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி நிறுவனங்களின் அடிப்படையில் ஒரு சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வில்

உறுதிப்படுத்தப்படவில்லை. அதிகாரசபையானது CHC/626/22/ARB என்ற மனுவை 2022 ஜூலை ஆம் திகதியன்று கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் தன்னிச்சையான வழக்கின் இறுதியான அனுமதிக்கு எதிராக தாக்கல் செய்தது.

(க) 2022 ஜூன் 10 ஆம் திகதி வரையில் காணப்பட்ட நிலையான வைப்பு மீதிகள் உயர் வட்டி வீதத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா. 14,259,010 தொகையுடைய நிலையான வைப்புக்கள் மீளவும் முதலீடு செய்யப்படாமையினால், அதிகாரசபைக்கு ரூபா. 1,651,867 தொகையுடைய நிதி இழப்பு ஏற்பட்டது.

(கா) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ள உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களில், அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள 2 பணிப்பாளர் பதவிகள், 6 உதவி பணிப்பாளர் பதவிகள், 5 சட்ட மற்றும் அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் மற்றும் 100 புலனாய்வு உத்தியோகத்தர்களின் பதவிகள் வெற்றிடங்களாக காணப்படுவதால், சட்டத்தின் பிரதான நோக்கங்களை அடைவதில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் நியதிகளின்படி, 2022 டிசம்பர் 31 இலுள்ளவாறான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தவிசாளரின் அவதானிப்புக்கள் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகள்

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 தகைமைவாய்ந்த கருத்துரைக்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத் தறை கணக்கீட்டு நியமம் 3 இன் படி, வரலாற்று கிரய அடிப்படையில் பின்வரும் (ஈ) தவறினால் ஏற்பட்ட மேலதிக வட்டி வருமானத்தை சீராக்கம்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) பாதுகாப்பான கணக்கீட்டு எண்ணக்கருவின்படி (Prudence), சொத்துக்கள் மற்றும் வருமானமானது மிகையாக மதிப்பிடப்படக்கூடாது என்பதுடன் பொறுப்புகளை குறைத்து மதிப்பிடவும் கூடாது. பணிக்கொடை என்பது நிறுவனத்தின் ஒரு பொறுப்பாகும். அதன்படி, ஊழியர் ஒருவரின் சேவைக் காலமானது ஒரு வருடத்தினை விஞ்சாத போதிலும், அந்த ஊழியரானவர் வருடம் முழுவதும் சேவையில் இருந்தார் என்றே கருதப்படுதல் வேண்டும். மேலும், ஊழியர் ஒருவர் ஓய்வு பெறும் போது / சேவையிலிருந்து விலகும் போது செலுத்த வேண்டிய தொகையானது வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். இல்லையெனில், வைப்புச் செய்யப்பட்ட தொகையானது, ஊழியர்கள் வேலையில் இருந்து ஓய்வு பெறும் போது / இராஜினாமா செய்யும் போது செலுத்த வேண்டிய தொகையை விட குறைவாகவே இருக்கும். எனவே, இந்த உண்மைகளின் அடிப்படையில் பாதுகாப்பு கணக்கீட்டு மற்றும் ஏற்பாட்டு எண்ணக்கரு என்ற வகையில் கருதப்பட்டு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதால், அதை மிகை மதிப்பீட்டாகக் கருத முடியாது.

(இ) முதலீடுகள் 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 49 இன் படி, அதிகாரசபைக்கு நிதியமொன்று இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மேற்படி பிரிவுகளின் கீழ் உள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றி, அதிகாரசபையினால் பெறப்பட்ட பணமானது மக்கள் வங்கிக் கணக்கு இலக்கமான 014100120110475 இன் சேகரிப்புக் கணக்கில் சேகரிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணமானது, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அரச வங்கிகளின் நிலையான வைப்புகளில் மிகவும் சாதகமான வட்டி வீதத்தில் வைப்புச் செய்யப்பட்டதுடன் குறித்த பகுதியானது நிதிநிலை அறிக்கையில் முதலீடுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, ரூபா.371,291,985 என்பது வைப்புச் செய்யப்பட்ட முதலீடாகும்.

பணிக்கொடை நிதிகளின் முதலீடுகள் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இல. 19 இன் படி, 5 வருடங்களைத் தாண்டிய சேவைக் காலம் கொண்ட ஊழியர்களுக்கு அவர்கள் வேலையை விட்டு வெளியேறும் போது அவர்களின் சேவைக் காலத்திற்கான பணிக்கொடைத் தொகையானது வழங்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்க, அதிகாரசபையில் ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட திகதியிலிருந்து, பணிக்கொடைக்கான ஒதுக்கீடு வருடாந்தம் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய ஒதுக்கீடு அரச வங்கிகளில் நிலையான வைப்புத்தொகையாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் மிகவும் சாதகமான வட்டி வீதத்தில் முதலீடு செய்யப்பட்டது. அத்தகைய முதலீடுகள் பணிக்கொடை நிதிய முதலீடுகள் (GFI) எனக் குறிப்பிடப்படுகின்றன. (இது கணக்குக் குறிப்பு இல. 4.2.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.) அதற்கிணங்க, ரூபா. 79,344,883 பணிக்கொடை நிதியத்தில் முதலீடு செய்யப்படுகின்றது.

(ஈ) 2021 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில், குறைந்து வரும் வட்டி வருமானம் முந்தைய ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்துடன் சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும் என்ற போதிலும், 2022 ஆம் ஆண்டின் வட்டி வருமானத்தை சீராக்கம் செய்ததன் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளதுடன் அதனை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

(உ) 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கப்படாத மேலதிக நேரக் கொடுப்பனவு ரூபா.152,601/- 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டது. இது மேலதிக நேரக் கொடுப்பனவு கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, இந்தத் தொகை முந்தைய ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்துடன் சீராக்கம் செய்யப்படுகிறது (நிறுத்தி வைக்கப்பட்ட வருமானங்கள் பற்று வைக்கப்பட்டு, மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வரவு வைக்கப்பட்டன). அதற்கிணங்க, திரட்டப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவு கணக்கு சமநிலையில் இருக்கும். எனவே, மீளாய்வு ஆண்டில் திரட்டப்பட்ட செலவுக் கணக்கின் மீதி குறைவாகக் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் நிதிக் கூற்றுக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்தின் மீதி அதிகமாகக் குறிப்பிடப்படவில்லை.

(ஊ) குறித்த ஆண்டில் கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டியவாறு, காசுப் பாய்ச்சல் கூற்றானது தயாரிக்கப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின்படி வழங்கப்பட்டது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.2.4

(அ) பாவனையாளர் முறைப்பாடுகளினைப் பெற்றுக் கொள்வதற்கு 1977 என்ற ஹாட்லைன் தற்போதும் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது, விசாரணையின் முன்னேற்றத்தை முறைப்பாட்டாளருக்கு தெரிவிப்பதற்கு, முன்னோடி திட்டத்தை செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், தற்போதைய பொருளாதார மற்றும் சமூகத் தேவைப்பாடுகள் மற்றும் அதிகாரசபையின் நோக்கங்களை உயர் மட்டத்தில் அடைவதன் அவசியத்தை சிறந்த முறையில் புரிந்து கொண்டு வாடிக்கையாளர் திருப்தியை பூர்த்தி செய்யும் வகையில் அனைத்து பிரிவுகளையும் இணைக்கும் மென்பொருளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மென்பொருட்களும் கணக்கீட்டு தகவல் முறைமையுடன் தொடர்புடையவை என்பதுடன் கணக்கீட்டு முறைமையினை கொள்வனவு செய்வதன் மூலம் வாங்கப்படுகின்றன. அதன்படி, கணக்கீட்டு முறைமையானது செயல்பாட்டில் உள்ளதுடன் ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் மேலதிக பணிகள் மூலோபாய நிதிகள் மற்றும் ஏனைய முறைமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன, மேலும் முகாமைத்துவம் மற்றும் அதிகாரசபையின் ஏனைய அதிகாரிகள் இல்லாமல் முறைமைகளை மேம்படுத்துவது இடர்பாடு மிகுந்ததாக உள்ளது. இருப்பினும், முறைமை கட்டுப்பாட்டாளர் பணியமர்த்தப்பட்டு, இந்த மென்பொருளைக் கொண்டு அடிப்படை தரவு புதுப்பித்தலானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது ஓரளவு செயல்படும் மென்பொருளை கணினியில் ஒருங்கிணைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களிடம் (IT Experts) கேட்கப்பட்டது, மேலும் அவர்கள் மென்பொருளை ஒருங்கிணைக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். அதன்படி, இந்த மென்பொருள் முகாமைத்துவ தகவல் முறைமையுடன் ஒருங்கிணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட உள்ளது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2022.07.21 ஆம் திகதிய கடிதத்தில், 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டம் தொடர்பில் செய்யப்பட்ட திருத்தங்களை புதிய அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர், 2023.04.23 ஆம் திகதியன்று நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் திருத்தம் தொடர்பான 23/0771/627/013 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

அதற்கிணங்க, 2023.02.05 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட தீர்மானமானது, 2023.05.09 ஆம் திகதியன்று அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் (இணைப்பு 05) அதன் பிரதியானது, சட்ட வரைஞர் திணைக்களத்துடன் இணைந்து மேலதிக வேலைகளினை முன்னெடுப்பதற்காக அதிகாரசபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) வருடாந்திர செயல் திட்டம் 2022 இன் படி, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 10 ஆவது பிரிவின் கீழ் காலாண்டுக்கு 25 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வகையில் 100 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என லேபலிடப்பட்ட கட்டளைகளின் மீது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் பணிப்பாளரானவர் அனைத்து மாகாண உதவிப் பணிப்பாளர்களுக்கும் மாவட்டத் தலைவர்களுக்கும் 2022.08.25 (இணைப்பு 07) திகதியிடப்பட்ட CAA/CA&I/EDU/MP/04/2022-03 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மீளாய்வு ஆண்டில் வழங்கப்பட்ட 83, 84 மற்றும் 85 ஆம் இலக்க கட்டளைகள் தொடர்பில் தெரியப்படுத்துமாறு தெரிவித்திருந்தார். அதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் மேற்கண்ட உத்தரவுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தையும் சேர்த்து மேற்குறித்த விடயம் தொடர்பில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 27 ஆகும். விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கணினி அடிப்படையிலான விளக்கக்காட்சிகளை (presentation) நடாத்தும் போது, குறைந்த செலவில் இப்பணியை திறமையாகவும் வினைத்திறனுடனும் நடாத்த முடியும் என்பது உறுதி செய்யப்பட்டதுடன் பிரிவு 10 இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் தொடர்பில் தனியான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த தேவையில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும், தற்போது பயன்படுத்தப்படும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகள் குறித்த தகவல்களை வர்த்தக சமூகத்தினரிடையே பரப்புவது என முடிவு செய்யப்பட்டதுடன் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் ஒவ்வொரு கட்டளையினையும் தொடர்பு கொள்வதில் உள்ள நடைமுறை சிக்கல்களைப் புரிந்துகொண்டு, அதற்கான தீர்வாக QR குறியீட்டைப் பதிவிறக்குவதன் மூலம் வர்த்தகம் மற்றும் பாவனையாளர் சமூகத்தை விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

(இ) பாவனையளார் அலுவல்கள் அதிகாரசபையானது சட்டத்தின் 27 ஆவது பிரிவின்படி வர்த்தகர்களை பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அதன்படி, 2022 செப்டெம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் வத்துல ஜா-எல பிரதேச செயலகத்தில் விற்பனையாளர்களைப் பதிவு செய்யும் போது பெறப்பட வேண்டிய தரவுகளையும் உள்ளடக்க வேண்டிய பகுதிகளையும் கண்டறியும் முன்னோடித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. 2023 ஜூன் மாத

இறுதிக்குள், இந்த வர்த்தகர்களின் பதிவுக்குத் தேவையான மென்பொருள் மற்றும் தரவு அமைப்பைத் தயாரிப்பதற்கான முதல் கட்டம் 2023 ஜூன் இறுதிக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) 2018 இலிருந்து 2022 வரையிலான ஆண்டின் இறுதி நாளுக்குள் பதிவு செய்யப்பட்டு தீர்வு காணப்படாத முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை கீழே உள்ளது. இந்த முறைப்பாடுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட ஆண்டு இறுதிக்குள் பதிவு செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த முறைப்பாடுகள் அனைத்தும் முறையான நடைமுறைகளுக்கிணங்க உரிய நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு குறித்த ஆண்டிற்கு அடுத்த ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

வருடம்	**ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்டு கோவைப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**	**2023 மே மாத இறுதிக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை**
2018	430	0
2019	364	0
2020	572	0
2021	474	0
2022	1047	7

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முறைப்பாடுகளுக்கு இறுதித் தீர்வு வழங்கப்படாவிட்டால், முறைப்பாடு தொடர்பான நடவடிக்கையானது ஒவ்வொரு முறைப்பாட்டினையும் பதிவு செய்வதோடு ஆரம்பமாகும். 2022 டிசம்பர் 31, நிலவரப்படி, 1040 கோவைகள் செயன்முறைபடுத்தப்பட்டுள்ளன, மேலும் 7 கோவைகள் மட்டுமே செயலாக்கப்பட வேண்டியுள்ளன. பாவனையாளர் முறைப்பாடுகள் பிரிவானது, 2022 ஆம் ஆண்டின் முந்தைய ஆண்டுகளில் இருந்து அனைத்து முறைப்பாடுகளையும் பரிசீலித்து முடித்துள்ளது.

2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்குள் மாவட்ட அலுவலகங்களில் பெறப்பட்ட வாடிக்கையாளர் நிவாரண முறைப்பாடுகளில் இருந்து பெறப்பட்ட 284 புகார்கள் தொடர்பான தற்போதைய நிலை, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்பன இணைப்பு 06 இல் தரப்பட்டுள்ளன.

(உ) பாவனையாளார் அலுவல்கள் மற்றும் தகவல் பிரிவானது 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 23280 சோதனை இலக்குகளை திட்டமிட்டிருந்தது, ஆனால் 2022 இன் முற்பகுதியில் சில மாதங்கள் நாடு மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தமையால் (எரிபொருள் பற்றாக்குறை, நாட்டில் நெருக்கடி நிலைமை) 13980 சோதனைகளினை அதாவது திட்டமிட்டப்பட்டிருந்த இலக்கில் 60% இனை மட்டுமே மேற்கொள்ள முடிந்திருந்தது.

மேற்கூறிய காரணிகளுக்கு மேலதிகமாக, உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் வாகனம் தொடர்பாக எதிர்நோக்கிய பிரச்சனைகள் காரணமாக கொழும்பு, கண்டி, களுத்துறை, பதுளை மற்றும் நுவரெலியா பதுளை மாவட்டங்கள் தமது இலக்குகளை அடைவதில் பல்வேறு பிரச்சனைகளினை எதிர் நோக்கியிருந்தன.

உதாரணம் - கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களில் புலானய்வு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை.

கண்டி மாவட்டத்தில் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கு சுமார் 02 மாதங்கள் வரையில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டமை.

(ஊ) இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூர் தயாரிப்புகளின் தரம் மற்றும் அத்தகைய பொருட்களின் தரத்தை கண்காணிக்கும் நிறுவனங்களின் தகவல்கள் உள்ளிட்ட பொதுவான தரவுத்தளத்தை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அனைத்து கண்காணிப்பு நிறுவனங்களிடமிருந்தும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெறுவதில் நடைமுறை சிக்கல்கள் மற்றும் தொழில்நுட்ப தவறுகள் இருந்துள்ளன. தரவுகளைப் பொறுத்தமட்டில் அவற்றுக்கென பொறுப்பு வாய்ந்த நிறுவனம் ஒன்றும் காணப்படாமையால் இந்தத் தரவுத் தளத்தை நிறுவவும், அதனைச் செயற்படுத்தவும் முடியவில்லை.

(ஊ) மேலே (இ) இல் குறிப்பிட்டுள்ளபடி, இந்த செயல்முறையானது கணினி மென்பொருளைப் பயன்படுத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணினி மென்பொருள் வாங்கப்படாததால் செயல்முறை நடைபெறவில்லை. ஆனால், அத்தியாவசியப் பொருட்களின் சில்லறை விலையை சேகரிக்கும் நடவடிக்கையானது தற்போது அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய புலனாய்வு அதிகாரிகளின் சேவையைப் பெற்று மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், மென்பொருளை (தரவு முறைமைகள்) வாங்கிய பிறகு, இந்த செயல்முறையானது மென்பொருள் மூலம் செயல்படுத்தப்படுதல் வேண்டும்.

(எ) 50 பாடசாலை பாவனையாளர் மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 7 மையங்கள் மட்டுமே தாபிக்க முடிந்துள்ளது. 2022 இல் நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் பின்னணியில், பள்ளிகளின் நேர அட்டவணைகள் வழக்கமானவற்றிலிருந்து வேறுபட்டுள்ளதுடன் பாடநெறி

நடவடிக்கைகளுக்கான நேரம் குறைவாக இருந்துள்ளது. பாடசாலை பாவனையாளர் மையங்கள் தாபிப்பது பாடசாலையின் நிருவாகத்துடன் மட்டுமே மேற்கொள்ளப்படுவதால், அதற்கு குறைந்தளவிலான பங்களிப்பே கிடைத்துள்ளது.

(ஏ) இணைய வழி வர்த்தகத்தின் நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளைக் குறைப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் வர்த்தகர்களுக்கான வழிகாட்டுதல்கள அதிகாரசபை தயாரித்துள்ளது. 2021 ஜூன் 30, 2022 மே 15 மற்றும் 2022 அக்டோபர் 19 ஆகிய திகதிகளில் அதிகாரசபையானது பொது மற்றும் தனிப்பட்ட கருத்தாடல்களை நடாத்தியுள்ளது.

(ஐ) இத்தகைய கருத்தாடல்களின் விளைவாக, இணைய வழி வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்களைக் கண்காணிக்கும் பொருட்டு அதிகாரசபையானது பணிப்புரையொன்றினை வழங்கியுள்ளது. (பணிப்புரை இல. 91)

(ஒ) சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பின்வரும் மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து வருமதியாகவுள்ள துயர் துடைப்புக் கடன் மீதி ரூபா. 297,640.56 என அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேவை இல.	பெயர்	துயர் துடைப்பு கடன் மீதி
191	திரு.என்.ஏ.கே.எச். குமார	ரூபா. 69,483.28
335	திரு.எஸ்.என்.எஸ்.பீ.ஐ.ரி. ஜயசிங்க	ரூபா. 66,666.52
429	திரு.டப்.டீ.பி.என். ஜயவர்தன	ரூபா.161,490.76

சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மூன்று அதிகாரிகளில், சேவை இலக்கம் 335 மற்றும் 429 இனைக் கொண்ட இரண்டு உத்தியோகத்தர்கள் 2023 இல் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டதன் காரணமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர், மேலும் தற்போது கணக்குப் புத்தகங்களில் உள்ள நிலுவைகளை இடைநிறுத்தப்பட்ட மூன்று அதிகாரிகளிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டியுள்ளதுடன் விரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கிணங்க, அந்த மக்களின் துயர் துடைப்பு கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ள உத்தரவாததாரர்களிடமிருந்து குறித்த தொகைகளினை அறவீடு செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை மேலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

(ஓ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்பட்ட மூலோபாயத்தைப் பயன்படுத்தி திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன என்பதை முகாமைத்துவம் உணர்ந்துள்ள போதிலும் வழக்குகள் தாமதமடைகின்றன. நடவடிக்கைகளினை பின்தொடர்தலின் போது, சில தொழில்நுட்ப காரணங்களால் பாதிக்கப்பட்டது. (வழக்குக்குரிய ஆவணங்கள் மற்றும் அழிவடைந்துபோகும் மாதிரிகள் போன்றவை). இதன்படி, மாவட்டத்

தலைவர்கள் மற்றும் மாகாண உதவிப் பணிப்பாளர்களுக்கு 2022.07.27 ஆம் திகதிய 01/2022/FIN ஆம் இலக்கம் கொண்ட உள்ளக சுற்றறிக்கையின் மூலம் நிதிப் பிரிவுக்கு பணம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உபாயத்தின்படி, ஏற்கனவே பணத் தீர்ப்பனவானது நடைபெற்று வருகின்றது, இந்த ஆண்டு இறுதிக்குள், நிலுவைத் தொகையினை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வேன்.

(ஔ) **SICPA SA ஆல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நடுவத்தீர்ப்பு நடவடிக்கைகள்**

பாதுகாப்பற்ற மற்றும் தரம் குறைஔ்த பொருட்களிலிருந்து நுகர்வோர் சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் அடையாளம் காணப்பட்ட சில பொருட்களுக்கான பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தீர்மானித்துள்ளதுடன் 2014.02.21 ஆம் திகதிய 1851/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 49 ஆம் இலக்க பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வர்த்தமானி அறிவித்தலினை வெளியீடு செய்வதற்கு முன்னரும், கருத்திட்டம் தொடர்பான உடன்படிக்கைக்கு முன்னரும் பாவனையளார் அலுவல்கள் அதிகாரசபையானது தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் சந்தை கணக்கெடுப்பை மேற்கொண்டது. இது தவிர, சம்பந்தப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, பாதுகாப்பு ஸ்ரிக்கருடன் வணிகப் பொருட்கள் சந்தையில் நுழைவதைத் தடுப்பதன் மூலம் உற்பத்தியின் பண்டப் பெயர் பாதுகாக்கப்படுவதோடு பாவனையாளர் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் CAA/DG/56/2013 மற்றும் பணிப்பாளர் சபைக்கு குழுவிற்கு 2013 நவம்பர் 25, ஆம் திகதிய CAA/DG/56/2013 பணிப்பாளர் சபை பத்திரம் மூலமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தங்களின் அறிக்கையுடன் நான் உடன்பட முடியாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எவ்வாறாயினும், மேற்கூறிய பணிப்புரை இலக்கம் 49 இனை இரத்து செய்தல் மற்றும் வேறு சில கோரிக்கைகளின் அடிப்படையில், உற்பத்தி தொழிற்சங்கங்கள் கௌரவ மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு எதிராக CA/writ/281/14 ஆம் இலக்க வழக்கினைத் தாக்கல் செய்தன. அந்தக் கோரிக்கைகளை பரிசீலித்து, கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றம், இறுதித் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரையில் பணிப்புரை இல. 49 இன் செயற்பாட்டைத் தடுக்கும் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது, அதன்படி, பாவனையளார் அதிகாரசபையானது SICPA பாதுகாப்புத் தீர்வுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி கருத்திட்டத்தைத் தொடர முடியாது.

வழக்கு இல. CA/writ/281/14 தொடர்பான இடைக்கால உத்தரவின்படி, ஒப்பந்தத்தின்படி நிருமாணப் பணிகளைத் தொடர்வதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஒப்பந்தத்தின் முன்னோடி நிபந்தனைகளுக்கிணங்க நடவடிக்கைகளினை முன்னெடுப்பது நீதின்ற அவமதிப்பாக அமையலாம். அதன்படி, SICPA SECURITY SOLUTIONSA நிறுவனம் ஒருதலைப்பட்சமாக, ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு இணங்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் செயற்பட முடியாமையால் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியது. SICPASECURITY SOLUTION SA ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி இந்தப் பிரச்சினை தொடர்பாக 2018.07.30 ஆம் திகதியன்று சர்வதேச நடுவர் மன்றத்தில் ஒரு நடுவர் வழக்கைத் தாக்கல் செய்தது.

(க) 2022 ஆம் ஆண்டிற்கு திறைசேரியானது ரூபா. 40 மில்லியன் மட்டுமே ஒதுக்கீடு செயதுள்ளதுடன் அதிகாரசபையின் நிதியிலிருந்து ரூபா. 65 மில்லியன் செலவினத்திற்காக பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அதன்படி, விலைகளை கோரிய பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஒருங்கிணைந்த தரவு முறைமைக்குத் தேவையான பணத்தை ஈடுகட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது, மேலும், ஏனைய செலவுகளுக்கு தேவையான பணத்தின் ஒரு பகுதியினை பொறுப்பேற்றுகும் நோக்கமும் இருந்துள்ளது. அந்த காரணங்களுக்காக, இந்த நிலையான வைப்பு அதே முறையில் பேணப்பட்டது. இருப்பினும், மேற்கூறிய ஒருங்கிணைந்த தரவு முறைமையின் கேள்வி மனுக்கள் இரத்து செய்யப்பட்டதாலும், ஆண்டின் இறுதியில் ஏனைய செலவுகளுக்காக திறைசேரியிலிருந்து பணம் விடுவிக்கப்பட்டதாலும், நிலையான வைப்புத்தொகை கழிவீடு செய்யப்படவில்லை. அந்த நேரத்தில், அதனை கழிவீடு செய்து அதனை மீண்டும் முதலீடு செய்தால், வருடாந்த வட்டி விகிதங்களும் குறைந்துவிடும், எனவே அதனை முதிர்வு வரை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

(கா) கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவது தொடர்பில் அதிகாரசபைக்கு பல்வேறு தடைகள் இருந்துள்ளதை நான் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். அதற்கிணங்க, ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் மட்டுப்படுத்தல்கள் காணப்பட்டதுடன் குறித்த கணக்காய்வு ஐய வினாக்கள் வெளியிடப்பட்ட போது நிதி அமைச்சினால் பொதுச் செலவினங்களை மீளாய்வு செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் 2021.08.28 ஆம் திகதி நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டதுடன் பொது செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் 2022.04.26 ஆம் திகதியன்று 03/2022 ஆம் இலக்க சுற்றிக்கையும் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க, பொது செலவினங்களினைக் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை எழுந்தமையினால், ஆட்சேர்ப்பு செயல்முறையை அதிகாரசபையால் செயல்படுத்த முடியவில்லை.

எவ்வாறாயினும், 2022.12.31 ஆம் திகதியன்று, பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமான பணியாளர்களை நியமிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் மற்றும் 2022.10.19 ஆம் திகதிய CAA/HRA/Ministry/Rec/2022 ஆம் இலக்கம் கொண்ட கடிதத்தின்படி, வரிசை அமைச்சின் செயலாளரானவர், வெற்றிடமாகவுள்ள பதவி நிலைகளினை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்துள்ளார்.

2023.05.02 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 6 உதவி பணிப்பாளர் (பிராந்திய விவகாரங்கள்) பதவிகளின் கடமைகளினை மேற்கொள்வதற்கு 6 சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வெற்றிடமாக உள்ள பணிப்பாளர் (சட்டம் மற்றும் அமலாக்கல்) பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் செய்தித்தாள் விளம்பரம் மூலம் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

மேலும், கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 05 சட்ட மற்றும் அமலாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு 05 சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டு அந்த வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கணக்காய்வு ஐய வினாக்களில் குறிப்பிடப்பட்டவாறு, 100 புலன் விசாரணை உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனால், வெற்றிடங்கள் காணப்பட் போதிலும், நிறுவன விதிக் கோவை, சம்பள மற்றும் புள்ளிவிபரங்கள் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைகளின்படி, அந்த பதவிகளை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை அதிகாரசபை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதனை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சாந்த நிரியெல்ல (உயர் நீதிமன்ற சட்டத்தரணி)

தவிசாளர்